## 6. அரசின் சட்ட முன்வடிவு

தமிழ் நாடு 1975ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1975).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன வடிவு எண் 11/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன் மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 7. அரசின் தீர்மானம்

### சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள சாலைப் போக்கு வரத்துப் பணிகள் குறித்த கொள்கைக் குறிப்பு † பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

---

@† 613—616ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 617—662ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.